தீர்ப்பளிக்கப் பட்டதன்மேல் ஓரிலட்சம் ரூபாவுக்கு மேற்படாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஏழாண்டுகளை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

(2) அரசியலமைப்பின் 154ஞ என்னும் உறுப்புரையின்கீழ் தாபிக்கப்பட்ட மேல்நீதிமன்றமொன்று (1) ஆம் பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஏதேனும் குற்றத்தைக் கேட்டுத் தீர்மானிப்பதற்கான தத்துவமுடையதாதல் வேண்டும்.

ஆணைக் குழுவின் தத்துவங்கள்.

155எ. (1) (அ) பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி தவிர்ந்த வேறு பொலிசு அலுவலர்களின் நியமனம், பதவியுயர்வு, இடமாற்றம், ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு அத்துடன் பதவிநீக்கம் என்பன ஆணைக்குழுவுக்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும். ஆணைக்குழுவானது, பதவியுயர்வு, இடமாற்ற, ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டு, பதவியிலிருந்து அகற்றுதற் தத்துவங்களை பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதியுடனான கலந்தாலோசனையுடன் பிரயோகித்தல் வேண்டும்.

(ஆ) ஆணைக்குழுவானது இவ்வுறுப்புரையின் கீழ் அதன் தத்துவங்களைப் பிரயோகிக்கையில், அரசியலமைப்பின் XVIIஅ என்னும் அத்தியாயத்தின்கீழ் மாகாணப் பொலிசுச் சேவை ஆணைக்குழுக்கள் தாபிக்கப்படுகையிலும் தாபிக்கப்படும் போதும் அத்தகைய ஆணைக்குழுக்களின் தத்துவங்களையும் பணிகளையும் மதிப்புக் குறைத்தல் ஆகாது.

(2) ஆணைக்குழுவானது, பொலிசு அலுவலர் ஒருவருக்கு அல்லது பொலிசுச் சேவைக்கு எதிராகச் செய்யப்படும் பொதுமக்களின் முறைப்பாடுகளையும் இடருற்ற எவரேனும் ஆளின் முறைப்பாடுகளையும் ஏற்றுக் கவனிப்